நேற்று முன்தினம் (25.06.2024) போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் 2024-2025 ஆம்ஆண்டிற்கான போக்கு வரத்துத் துறையின் மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக, சென்னை, காமராஜர் சாலை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

நேற்று முன்தினம் (25.06.2024) சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான் 2024-2025 ஆம்ஆண்டிற்கான சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் துறையின் மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக, சென்னை, காமராஜர் சாலை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

நேற்று முன்தினம் (25.06.2024) சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் 2024-2025 ஆம் ஆண்டிற்கான சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறையின் மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக, சென்னை, காமராஜர் சாலை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

நேற்று முன்தினம் (25.06.2024) ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திருமதி என். கயல்விழி செல்வராஜ் 2024-2025 ஆம் ஆண்டிற்கான ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக, சென்னை, காமராஜர் சாலை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

தஞ்சையில் நெல் கொள்முதல் நிலையங்களுக்கு

தேவைக்கேற்ப குடோன் வசதி - நெல் தூற்ற - உலர வைக்க களம் வசதி செய்திடுக!

சட்டப் பேரவையில் தஞ்சை - டி.கே.ஜி.நீலமேகம் பேச்சு!

தஞ்சை, ஜூன் 27-

தஞ்சையில் நெல் கொள்முதல் நிலையங்களுக்கு தேவைக்கேற்ப குடோன் வசதி - நெல் தூற்றவும், உலர வைக்க களம் ஆகியவற்றை அமைத்திடுக என்று சட்டப் பேரவையில் உறுப்பினர் டி.கே.ஜி.நீல மேகம் பேசுகையில் கோரிக்கை விடுத்தார்.

சட்டப் பேரவையில் வேளாண் துறை, பால்வளத் துறை, கால்நடைத்துறை மானியத்தில் உறுப்பினர் டி.கே.ஜி.நீல மேகம் பேசியதாவது:-

திராவிட இயக்கத்தின் தலைவர்களான, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன்.

தொலைநோக்குப் பார்வையும், தீர்க்கமான சிந்தனையும் விசாயிகளின்மீது மாறாத அன்பும், அவர்தம் இன்னல்களைக் களைவதில் அயராத உழைப்பும், வேளாண் உற்பத்தியில் புரட்சியும், உழவர்களின் வாழ்க்கைத் தரம் உயர்த்திட எண்ணற்ற திட்டங்களைத் தந்து, இந்தியத் துணைக் கண்டமே வியக்கும் அளவிற்கு தமிழ்நாட்டிற்கு விடிய லைத் தந்து, வீணர்களை வியக்கச் செய்து, 40/40 வெற்றி கண்ட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வணங்குகின்றேன்.

இளைய சமுதாயத்தின், எழுச்சி மிக்க தலைவர், எழுச்சிமிக்க தள பதி, தமிழ்ச் சமுதாயத்தின் நம் பிக்கை நட்சத்திரம், இன்றைய இளம் தலைவர், விளையாட்டுத் துறை அமைச்சர் அவர்களை வணங்குகின்றேன்.

நகராட்சி நிர்வாகம் மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச் சர் அவர்களையும், எங்களுடைய மாவட்டத்தின் பொறுப்பு அமைச் சர், பள்ளிக் கல்வித் துறை அமைச் சர் அவர்களையும் வணங்குகின் றேன்.

மானியக் கோரிக்கையில் பதி லுரையாற்றவிருக்கின்ற காரணத் தால், ஒவ்வொரு நிதிநிலை அறிக் கைக்கும் விவசாயிகளிடத்தில் தஞ்சையில் கருத்துக் கேட்புக் கூட்டங்களை நடத்திவருகின்ற,

கருத்துக்களை கேட்டு தொடர்ந்து நிதிநிலை அறிக் கையை வழங்கி சிறப்போடு செய லாற்றி வருகின்ற நம்முடைய மரி யாதைக்குரிய வேளாண் துறை அமைச்சர் அவர்களையும், கால் நடை பராமரிப்புத் துறை அமைச் சர் அவர்களையும், பால்வளத் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். பேரவைத் தலைவர் அவர்களையும், அரசு கொறடா அவர்களையும், பேர வைத் துணைத் தலைவர் அவர்க ளையும் வணங்குகிறேன்.

பேரவைத் தலைவர் அவர் களே, வேளாண்மைத் துறைக் கென இதுவரையிலே நான்கு தனி நிதிநிலை அறிக்கைகளைத் தாக் கல் செய்து, கடந்த மூன்று ஆண்டு களில் 371 அறிவிப்புகளை வெளி யிட்டு, அதில் 359 அறிவிப்புகளுக்கு அரசாணை வெளியிட்டு...

வேளாண்மைத் துறையிலே இதுவரையிலே நான்கு தனி நிதி நிலை அறிக்கைகளைத் தாக்கல் செய்து, கடந்த மூன்று ஆண்டு களில் 371 அறிவிப்புகளை வெளி யிட்டு, அதில் 359 அறிவிப்பு களுக்கு அரசாணை வெளியிட்டு அளப்பறிய சாதனைகளை செய் திருப்பது கண்டு, தமிழ்நாட்டு மக் கள், குறிப்பாக விவசாயப் பெருங் குடி மக்கள் நம் அரசைப் பாராட்டிக் கொண்டிருக்கின்ற னர். எங்கும் பசுமை, எதிலும் புரட்சி என்பதற்கு சான்று, வேறு எங்கும் இல்லாத அளவுக்கு தமிழ் நாட்டில் உணவு தானிய உற்பத்தி யில் பல இலட்சம் மெட்ரிக் டன் அளவுக்கு சாதனை படைத்து, இன்றைக்கு தமிழ்நாடே போற் றிக்கொண்டிருக்கிறது. டெல்டா மாவட்டங்களில் குறுவை சாகு படியை ஊக்கப்படுத்துகின்ற வகையில் குறுவை சாகுபடி திட் டத்திற்கு கடந்த மூன்று ஆண்டு களில் ரூபாய் 198 கோடிக்கு மேல் வழங்கப்பட்டு இதன்மூலம் பத்து இலட்சம் விவசாயிகள் பலன் அடைந்திருக்கிறார்கள்.

குறிப்பாக 2021 ஆம் ஆண்டில் 4.90 இலட்சம் ஏக்கர் நிலங்களும், 2022 ஆம் ஆண்டில் 5.36 ஏக்கர் நிலங்களும், 2023 ஆம் ஆண்டில் 5.59 இலட்சம் ஏக்கர் நிலங்களும் பயிரிடப்பட்டிருக்கிறது என்று சொன்னால், இதுதான் இந்த அர சினுடைய வெற்றியாகும். சிறுதா னிய பயிர்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்க 22 மாவட்டங் களை ஒருங்கிணைத்து, இரண்டு சிறுதானிய மண்டலங்களை அமைத்து, 102 கோடி மதிப்பீட் டில் தமிழ்நாடு சிறுதானிய இயக் கம் செயல்பட்டு வருவது மிகுந்த பாராட்டுக்குரியது, சிறப்புக்குரி யது. தமிழ்நாட்டில் வேளாண் துறையில் தன்னிறைவு அடை கின்ற வகையில் இந்த மூன்று ஆண்டுகளில் பயிர் பெருக்கும் திட்டம் மூலமாக 138 கோடி

ரூபாய்க்கு மேல் செலவிட்டு, ஐந் தரை இலட்சம் விவசாயிகளுக்கு மேல் பலனடைந்திருக்கிறார்கள். இதற்காக விவசாயப் பெருங்குடி மக்கள் அரசைப் பாராட்டி வரு கின்றனர். அதேபோல, எண் ணெய் வித்துக்கள் உற்பத்தியில் 83 கோடிக்கு மேல் நிதி ஒதுக்கீடு செய்து மூன்று இலட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் பலன டைந்து, நிம்மதி பெருமூச்சிட்டு, இந்த அரசை வாழ்த்திக் கொண்டி ருக்கின்றனர்.

கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ், ரூ. 610 கோடி வரையிலே ஒதுக்கீடு செய்து, பல்வேறு சிறப்புக்குரிய திட்டங்களை செயல்படுத்தி வரு கின்ற, பல லட்சம் தரிசு நிலங்கள் இன்றைக்கு பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டு, பல தானி யங்களின் உற்பத்தி இன்றைக்கு உயர்ந்திருக்கிறது. இந்த இடத் திலே வேளாண் துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புவது, பல் வேறு சிறப்புகள் நடைபெற்று வருகின்ற அந்தத் திட்டத்தில் மூன்று ஆண்டுகளாக கிராமம் ஒன்றுக்கு 300 முதல் 600 தென் னங்கன்றுகள் இலவசமாக விவசா யிகளுக்கு வழங்கப்பட்டு வந்தது. ஆனால், இந்த ஆண்டு வழங்கப்ப டாமல் உள்ளது. அதனைத் தொடர்ந்து வழங்கிட வேண்டும்.

தஞ்சை மாவட்டத்தின் தலை நகரமான தஞ்சாவூருக்கு ஒரு விதைப் பண்ணையும், வேளாண் அறிவியல் மையத்தையும், இயற்கை வேளாண் விஞ்ஞானி ஐயா நம்மாழ்வார் அவர்களு டைய பெயரில் அமைத்துத் தர வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். வேளாண் பல்கலைக் கழகம் தற் போது கோவையில் மிகுந்த சிறப்போடு செயலாற்றி வரு கிறது. இந்த நேரத்தில், நான் அமைச்சர் அவர்களிடத்தில் அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புவது டெல்டா மாவட்டத் தில் குறிப்பாக தஞ்சையில் வேளாண் பல்கலைக் கழக வளா கத்தை அமைத்து, வேளாண் மாணவர்கள் பயன்பெறுகின்ற வகையில் உதவி செய்ய வேண்டு மென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன். அதே போல, புதிய ரக நெல் அறிமுகப் படுத்துகின்ற போது, விளைச் சலை மேம்படுத்தி வேளாண் துறையிலே ஒரு புதிய புரட்சியை நமது அரசு உருவாக்கியிருக்கிறது. இதனை டெல்டா மாவட்ட விவ சாயிகள் சார்பில் மனதார வர வேற்கின்றோம்.

அதேநேரத்தில், அறிமுகம் செய்யப்படுகின்ற புதிய நெல் இர கங்களை விவசாயிகளுக்கு இலவ சமாக வழங்கி, பயிர் பெருகி, விவ சாய வளம் காக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். கார ணம், புதிய இரகங்கள் அறிமுகம் செய்கின்றபோது, விவசாயிகள் தனியாரிடத்தில் சென்று அதை வாங்குவதால், அதில் விலை உயர்வு ஏற்படுவதுடன், தட்டுப் பாடும் ஏற்படுகிறது. அதனைப் போக்கிட வேண்டுமென்று இந்த நேரத்தில் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தைப் பொறுத்தவரையில், மிகச் சிறப்போடு நமது அரசு செயல்பட்டு வருகிறது. தஞ்சை யில் உள்ள குடோன் மிகக் குறைந்த கொள்ளளவில் இருக்கி றது. அதில், புதிதாக 5 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவுள்ள 2 மெகா குடோன்களை அமைத்துத் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தோட்டக்கலை சார்பில் மானக ராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இலவசமாக வழங்கப்படுகின்ற காய்கறி மற்றும் பழ விற்பனை தள்ளுவண்டிகள் மிகவும் பயனுள் ளதாக ஏழை, எளியோருக்கு உத வுகின்ற வகையில் உள்ளது. அதே நேரத்தில், அதனை அதிகரித்து எண்ணிக்கை கூடுதலாக வழங்கி உதவும்படி கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்படுகின்ற டிராக்டர்கள், அறுவடை இயந்தி ரங்கள், நெல் நடவு இயந்திரங் கள், பவர் டில்லர்கள் மற்றும் பல உபகரணங்கள் வழங்குவது மிக வும் உதவிகரமாகவும், விவசாயி களை ஊக்கப்படுத்துவதாகவும் உள்ளது. அதன் எண்ணிக்கையை யும் மேலும் உயர்த்தி வழங்கி விவ சாயிகளுக்கு உதவிட வேண்டு மென்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தஞ்சாவூர் தொகுதிக்குட்பட்ட வல்லம் பேரூராட்சி மற்றும் அதனைச் சுற் றியுள்ள பகுதிகளில் நிலக்கடலை அதிகமாகப் பயிரிடப்படுகிறது. ஒழுங்குமுறை விற்பனைக் கூடத் தில் நிலக்கடலை ஒடு பிரிக்கின்ற இயந்திரம், வேளாண் விளை பொருட்களை உலர்த்திட ஏது வாக கூடுதல் சிமெண்ட் உலர் களம், நவீன எடை மேடை மற்றும் விவசாயிகளுக்கு ஓய் வறை போன்ற வசதிகளை ஏற்ப டுத்தித் தர வேண்டுமென்று வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கி றேன்.

வாழை - மரவள்ளிக்கிழங்கு மானியம்!

தஞ்சாவூர் மாவட்டத்தில், திரு விடைமருதூர், கும்பகோணம், பாபநாசம், திருவையாறு, தஞ்சா வூர், ஒரத்தநாடு போன்ற பகுதி களில் பல்லாயிரக்கணக்கான ஏக் கர் பரப்பளவில் வாழை, மர வள்ளிக் கிழங்கு, வெற்றிலை போன்றவை சாகுபடி செய்யப்ப டுகின்றன. இந்த விவசாயம் மிகப் பெரிய அளவில் நடைபெற்று வரு கிறது. அந்த விவசாயிகளை ஊக் கப்படுத்துகின்ற வகையில், வாழை மற்றும் மரவள்ளிக் கிழங்கு பயிரிடும் விவசாயிகளுக்கு மானியம் வழங்கி உதவிடும்படி கேட்டுக்கொள்கின்றேன். அதே போன்று வெற்றிலை சாகுபடி செய்கின்ற விவசாயி களுக்கு ஏற் கெனவே மானியம் வழங்கப் பட்டு வருகின்றது. அதை உயர்த் தித் தர வேண்டுமென்று அன்போடு இந்த நேரத்திலே கேட்டுக்கொள் கின்றேன்.

நமது அரசு, நெல், கரும்பு விவ சாயிகளுக்கு பல்வேறு நிலைகளில் கொள்முதல் விலையை உயர்த்திக் கொடுத்து வருகிறது. பல்வேறு நிலைகளில் அவற்றினுடைய விலை உயர்த்தப்பட்டதால், மிகச் சிறப்போடு அவர்கள் அதைப் பாராட்டி வருகிறார்கள். அந்த வரவேற்பையும் பெற்றிருக்கிறது. அதேநேரத்தில், தற்சமயமுள்ள விவசாய உற்பத்திச் செலவினங்க ளைக் கருத்தில்கொண்டு, கொள் முதல் விலையினை மேலும் உயர்த்தி வழங்கிட வேண்டு மென்று விவசாயிகளின் சார்பாக இந்த நேரத்தில் அரசைக் கேட் டுக்கொள்ள விரும்புகின்றேன்.

பால் வளத் துறையைப் பொறுத்தவரையில், பல மாநிலங் களை ஒப்பிடுகின்றபோது, பால் விற்பனை விலையினை ரூ.3/ குறைத்தும், கொள்முதல் விலை யினை ரூ.6/ உயர்த்தியும் மிகச் சிறப்போடு செயல்பட்டு வரு கின்ற நமது அரசு, மற்ற மாநிலங் களுக்கு வழிகாட்டக்கூடியதாய், நம்முடைய தமிழ்நாட்டு மக்களி டையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

காலதாமதமில்லாத பணப் பட்டுவாடா, கால்நடைத் தீவனங் களின் தரத்தை உயர்த்தியது, கால் நடைகளுக்கு வழங்குகின்ற மானி யத்தை அதிகரித்தது இதுபோன்ற சிறப்புக்குரிய செயல்பாடுகள் தற்போது பாராட்டைப் பெற் றுள்ளன.

அதேநேரத்தில், அமைச்சர் அவர்களிடத்தில் நான் கேட்டுக் கொள்ள விரும்புவது, இந்தப் பணிகள் எல்லாம் செவ்வனே நடைபெறுவதற்கு பால் உற்பத்தி யாளர் கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரிகின்ற ஊழியர்களை ஊக் கப்படுத்துகின்ற வகையில், சம் பள உயர்வு வழங்க வேண்டும். அதனால், அச்சங்கங்கள் மேலும் சிறப்பாக செயல்படும்.

கால்நடைத் துறையைப் பொறுத்தவரையில், சுகாதார விழிப்புணர்வு முகாம்கள் ஓர் ஒன் றியத்தில், வருடத்திற்கு 20 முகாம் கள் நடைபெற்று வருகின்றன. இது கால்நடை விவசாயிகளுக்கு பெரும்பலனை பெற்றுத் தருவ தோடு, பெரும் வரவேற்பையும் பெற்றுள்ளது.

தஞ்சாவூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கரந்தை கால் நடை பிராணிகள் நிலையத்தை கால் நடை மருந்தகமாக தரம் உயர்த் தித் தர வேண்டுமென்று அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ் நிலம் இணைய தளம்!

தமிழகம் முழுவதும் வரு வாய்த் துறை சார்பில் பட்டா மாற்றம் செய்கின்ற முறை online முறையில் "தமிழ் நிலம்" என்கின்ற இணையதளம் வாயிலாக செயல் படுத்தப்பட்டு வருகிறது. அதில் மேற்கொள்ளப்படும் பட்டா மாற்றங்கள் விரைவாகவும், கால தாமதமின்றியும் நிகழும் வண் ணம் கடந்த சில நாட்களுக்கு முன்னர் இணையதளத்தில் வரப் பெற்று சிறப்பாக இன்றைக்கு அது செயல்பட்டு வருகிறது. அதில் நீதிமன்ற நடவடிக்கைக ளுக்காக மட்டும் வரிசையிலே மாற்றம் செய்யப்பட்டு முன்னு ரிமை வழங்கப்படுகிறது. அதிலே, அவசர நிகழ்வுகளுக்கு மற்றும் அவசர மருத்துவ தேவைகளுக்கா கவும் அதனை முன்னுரிமை தர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தஞ்சாவூர் பகுதியில் மிக அதிகமான விவ சாயப் பகுதியாகவும் நம்முடைய Modern rice mills அரசின் சார்பில் இருக்கிறது என்றாலும்கூட தனி யார் வைத்திருக்கின்ற Modern rice mills ஏராளம். இருந்தாலும்கூட வல்லம் பகுதியில் இப்போது ஒரு Modern rice millஐ அமைத்துத் தர வேண்டுமென்று அரசைக் கேட் டுக்கொள்கின்றேன். அதேபோல தஞ்சை பெரிய கோவிலில் ஏற்படு கின்ற போக்குவரத்து நெரிசலை சரிசெய்கின்ற வகையில் மாற்றுப் பாதை அமைத்து தருவதற்கு அமைச்சர் அவர்களிடத்தில் என் னுடைய வேண்டுகோளை வைக் கின்றேன்.

அதேபோல பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களிடத் திலே CEO, DEO, BEO அலுவலக கட்டிடங்கள் உள்ளடங்கிய ஒருங் கிணைந்த பள்ளிக் கல்வித் துறை வளாகம் அமைத்து தர வேண்டு மென்று அவரிடத்திலே அன் போடு கேட்டுக்கொள்கின்றேன். அதேபோல என்னுடைய தொகு திக்குட்பட்ட பூக்காரத் தெரு பூச் சந்தை யில் நவீன வசதிகளுடன்கூ டிய பூச்சந்தை அமைத்து ஏறக்குறைய 100 ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்று வருகின்ற அந்த பூச்சந் தையை விரிவுபடுத்தி தரமுயர்த்தித் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழக வளாகத் தில் சித்த மருத்துவக் கல்லூரி அமைத்து தர வேண்டுமென்றும், தஞ்சை நாஞ்சிக்கோட்டை ஊராட்சியில் அரசு ஆரம்ப சுகா தாரநிலையத்தை அமைத்துத் தர வேண்டும்.

தஞ்சாவூர் பெரிய கோயில், புன்னைநல்லூர் மாரியம்மன் கோயில்களில் வெளி மாநிலங்கள் மற்றும் வெளி மாவட்டங்களிலி ருந்து வரும் பக்தர்கள் தங்கி சுவாமி தரிசனம் செய்வதற்கு ஏது வாக தமிழ்நாடு அரசின் சார்பில் இலவச பக்தர்கள் தங்கும் விடுதி கட்டி தர வேண்டுமென்று இந்த நேரத்திலே தஞ்சை மக்கள் சார்பா கக் கேட்டுக்கொள்கின்றேன். தஞ் சையைச் சுற்றியுள்ள மாணவர் களும் விளையாட்டு வீரர்களும் பயிற்சிபெறும் வகையில் அன்னை சத்யா விளையாட்டு அரங்கில் கபடி விளையாட்டிற்காக புதிய விளையாட்டுத் தளமும் புதிதாக அமைத்துத் தர வேண்டும்.

தஞ்சை நகர மத்தியப் பகுதி யில் பல்வேறு பகுதிகளில் தஞ்சை கரந்தை கால்நடைக் கிளை நிலை யத்தையும், அதேபோல தஞ்சை ஒன்றியத்தில் இருக்கின்ற பல ஊராட்சிகளில் இருக்கின்ற கால் நடைக் கிளை நிலையங்களை கால்நடை பராமரிப்பு மருத்துவத் தளங்களாக மாற்றித் தர வேண் டும்.

பட்டதாரி இளைஞர்கள் பயன்பெறும் வகையில் TNPSC, UPSC, RRB, வங்கி தேர்வுகள் போன்ற அரசு தேர்வுகளுக்கான இலவச நிரந்தர பயிற்சி மையம் தஞ்சையில் அமைத்துத் தர வேண் டும்.

தஞ்சாவூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வல்லம் பேரூராட்சியில் செயல்படுத்தப் பட்ட பாதாளச் சாக்கடைத் திட் டம் முழுமை யாக முடிவடைந்த நிலையில் தோண்டப்பட்ட சாலைகள் செப்பனிடாமல்உள் ளது. எனவே, புதிய தார்ச்சாலை அமைக்க வேண்டுமெனவும், தீய ணைப்பு நிலையம் அமைத்துத் தர அன்போடு கேட்டுக்கொள்கி றேன்.

நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு வடிவமைக்கப் பட்ட அலுவலகம், தேவைக்கு ஏற்ப குடோன் வசதி நெல் தூற்ற வும், உலரவைக்க களம் ஆகிய வற்றை லாரி போக்குவரத்திற்கு இடையூறு இல்லாமல் அமைத்துத் தர வேண்டும்.

வாடகை இடங்களில் செயல் படும் நியாயவிலை கடைகளுக்கு சொந்த கட்டிடம் அமைத்து தர வேண்டும்.

விவசாய பொறியியல் துறை அலுவலகத்தின்மூலம் வழங்கப்ப டும் (உழவு இயந்திரம் அறுவடை இயந்திரம்) பல்வேறு உழவு எந்தி ரங்களின் எண்ணிக்கையை அதி கப்படுத்த வேண்டும்.

தஞ்சாவூர் வட்டாட்சியர் அலுவலகம் மிகவும் பழுதடைந்து உள்ளதால் அதே இடத்தில் புதி தாக வட்டாட்சியர் அலுவலகம் கட்டித் தர வேண்டும், நகர்ப்புற (Town Settlement Register) TSLR கடந்த ஆட்சியில் கணினியில் பதி வேற்றம் செய்யப்பட்டது. அள வீடு மற்றும் பட்டாதாரர் பெயர் கள் அவசரகதியில் தவறாக பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. அதனால் பெருவாரியான மக்கள் அலைச்சலுக்கும் மன வேதனைக் கும் உள்ளாகின்றனர் TSLR பதி வேற்றத்தினை பழைய RSR 1965 மற்றும் நடப்பிலுள்ள Manual TSLR மற்றும் நகரப் பகுதியில் உள்ள கிராம நிர்வாக அலுவலர் வசமுள்ள கணக்குகள் கணக்கு எண் உடன் முழுமையாக ஒப் பிட்டு சரிபார்த்து அதன் பின்னரே ஆன்லைனில் வழங்கப்படும் TSLR நடைமுறைக்கு கொண்டு வர வேண்டும்.

நகரப் பகுதிகளில் உள்ள TSLR (Town Settlement Register) முழு புல பட்டா மாற்றத்தினை நகர நில அளவர்களிடமிருந்து பிரித்து அந் தந்த கிராம நிர்வாக அலுவலரி டம் வழங்கும் பட்சத்தில் பொது மக்களுக்கான வீண் அலைச்சல் குறையும்.

தஞ்சாவூர் தொகுதிக்கு உட் பட்ட பள்ளி அக்ரஹாரம் மற்றும் வலம்புரி யூனிட் கிராமங்களுக்கு கிராம நிர்வாக அலுவலர் கட்டி டம் நாஞ்சிகோட்டை சரக வரு வாய் அலுவலருக்கு பழுதடைந்த நிலையில் உள்ள கட்டடத்தை அந்த சீரகத்திற்கு உட்பட்ட பகு தியிலேயே புதிதாக கட்டித்தர வேண்டும்.

பெரிய வருவாய் கிராமங்க ளான புதுப்பட்டினம் நீலகிரி தெற்கு தோட்டம், நாஞ்சிக் கோட்டை, பிள்ளையார்பட்டி, கிராமங்களை இரண்டாக பிரித்து தனித்தனி கிராம நிர்வாக அலுவ லரை நியமித்திட வேண்டும்.

தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இருதய அறுவை சிகிச்சை துறையினை அமைக்க வேண்டுமென்பதும், தீய ணைப்பு நிலையம் அமைத்துத் தர அன்போடு கேட்டுக்கொள்கி றேன்.

நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு வடிவமைக்கப் பட்ட அலுவலகம், தேவைக்கு ஏற்ப குடோன் வசதி நெல் தூற்ற வும், உலரவைக்க களம் ஆகிய வற்றை லாரி போக்குவரத்திற்கு இடையூறு இல்லாமல் அமைத்துத் தர வேண்டுகிறேன் (ICU, NICU). ராசா மிராசுதார் மருத்துவமனை சாலை யில் நோயாளிகள், கர்ப்பிணி பெண்கள் சாலையை கடக்க சிர மப்படுவதால் மருத்துவமனைக்கு எதிரே சுரங்கபாதை அமைத்து பழைய பேருந்து நிலையத்தோடு இணைக்க வேண்டும். தஞ்சாவூர் மருத்துவமனை மருத்துவக்கல்லூ ரியுடன் இணைத்து புதிய பல் மருத்துவக் கல்லூரி தொடங்க வேண்டும்.

சாமியப்பா கூட்டுறவு மேலாண்மை நிலையத்தில் 11 ஏக் கர் பரப்பளவில் (Dcop) பட்டய பயிற்சி மட்டும் பயிற்றுவிக்கப்ப டுகிறது கூடுதலாக திண்டுக்கல் நகரில் இயங்கி வரும் காந்திகிராம கல்வி நிறுவனம் உருவாக்கியுள்ள ஊரக வளர்ச்சி, ஊரகப் பொரு ளாதாரம் மற்றும் விரிவாக்கக் கல்வி, கிராமப்புறம் சார்ந்த அறி வியல், ஒத்துழைப்பு, மேம்பாட்டு நிர்வாகம், கிராமிய சமூகவியல் போன்ற பாடப் பொருள்களை மையமாக வைத்து கல்வித் திட் டங்களை கொண்டு தஞ்சை கூட் டுறவு மேலாண்மை வளாகத்தில் தமிழ்நாடு அரசால் தலைவர் கலை ஞர் பெயரில் கிராமிய கல்வி நிறு வனம் ஒன்றை அமைத்துத்தர வேண்டும்.

பூம்புகார் கைவினைப் பொருள் கள் விற்பனை மையத்தை தஞ்சை பெரிய கோவில் வளாகத்தில் (புதிய கிளை) அமைத்துத் தர வேண்டும்.

ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் தஞ்சாவூர் நகரப்பகுதிகளில் அகழியை சுற்றி உள்ள குடிசை பகுதிகள் கட்டம் கட்டமாக அப் புறப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது அவர்களுக்கு மாற்று ஏற்பாடாக குடிசை மாற்று வாரி யத்தின் கீழ் அடுக்கு மாடி குடியி ருப்புகள் வழங்குவதாக அறிவிக் கப்பட்டுள்ளது இந்த அடுக்குமாடி குடியிருப்பினை நகரின் மிக அரு காமையில் உள்ள 20ஏக்கர் பரப்ப ளவு உள்ள கம்போஸ்ட் யார்டு தற்போது குப்பைக்கிடங்கு அங்கு செயல்படுவதில்லை அதற்குப்பதி லாக நகரின் 14 இடங்களில் குப் பைகள் பிரிக்கும் பணி நடைபெ றுகிறது. ஆகையால் மேலே குறிப்பிட்டுள்ள பகுதிகளை காலி செய்யும் மக்களுக்கு 20ஏக்கர் பரப்பளவு உள்ள கம்போஸ்ட் யார்டு இடத்தில் குடிசை மாற்று வாரியத்தால் அடுக்குமாடி குடியி ருப்பு கட்டப்பட்டு வீடுகளாக வழங்கிட வேண்டும்.

தஞ்சாவூர் சட்டமன்ற தொகுதி தஞ்சாவூர் நகர பகுதியில் அடக்கற தெரு, வண்டிக்கார தெரு, புதுப்பட்டினம், மகர்நோம் புச்சாவடி ஜெயலட்சுமி நகர், மாரியம்மன்கோவில் ரோடு, பெரி யசாலை ரோடு சின்ன ஆஸ்பத்திரி தொல்காப்பியர் சதுக்கம், ஜோதி நகர் பட்டுக்கோட்டை பிரிவு சாலை, பகுதிகளில் நிலவும் மின் னழுத்த குறைபாட்டை சரி செய்ய ஆடக்காரத் தெருவில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிரமான கழகம் சார்பில் புதி தாக 110/11 கேவி துணை மின் நிலையம் அமைத்து மின்னழுத்த குறைபாட்டை சரிசெய்ய வேண் டும்.

தஞ்சாவூர் சட்டமன்ற தொகுதி நீலகிரி தோட்டம், பிள் ளையார்பட்டி, நாஞ்சிக் கோட்டை, பின்னைநல்லூர் ஊராட்சிகளுக்கு உட்பட்ட நகர் விரிவாக்க பகுதிகளில் புதிதாக மின்மாற்றிகள் அமைத்து மின்ன ழுத்த குறைபாட்டை சரிசெய்ய வேண்டும்.

புதிய பேருந்து நிலையம் அரு கில் 33/11 KV துணை மின்நிலையம் ஒன்று அமைத்திட வேண்டும். மன்னர் சரபோஜி கல் லூரி அருகில் துணைமின்நிலையம் அமைத்து தர வேண்டும்.

தஞ்சாவூர் கல்லணை கால் வாய் பக்கவாட்டு சுவர்கள் எழுப் பப்பட்டு கழிவுநீர் கலக்காமல் செய்யவேண்டும்.

வடவாற்றிலிருந்து பிரியும் ஐவேலி வாய்க்கால் தொடர்ந்து ஆக்கிரமிக்கப்பட்டு தூர் அடைந் துள்ளது. அதை தூர்வாரி பக்க வாட்டு சுவர் எழுப்பி சீர்செய்து தர வேண்டுகிறேன்.

இவ்வாறு டி.கே.ஜி.நீலமேகம் பேசினார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

குமாரபாளையம் ஜெ.கே.கே.சுந்தரம்

ஜூன் 27 (2005)

சிறு வயதிலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர். இலங்கையில் வசித்தபோது கொழும்புவில் கிளைக் கழகச் செயலாளராகவும், தாயகம் திரும்பிய பின் 1970ஆம் ஆண்டில் ஒன்றுபட்ட சேலம் மாவட்டத்தின் செயற்குழு உறுப்பினராகவும், கழக சொத்துப் பாதுகாப்புக்குழு உறுப்பினராகவும் கழகப் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைவர் கலைஞர் அவர்களின் பொற்கரங்களால் 2004ல் கோவையில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் "அண்ணா விருது" பெற்றவர்.

"நான் பதவியில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் தமிழகத்தின் எந்தப் பகுதிக்கு சுற்றுப்பயணம் செய்தாலும், தன் காரிலேதான் நான் பயணம் செய்யவேண்டும் என்பதில் பிடிவாதமாக இருப்பார்" என தலைவர் கலைஞர் தனது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

தலைமைக் கழகம்

தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

முனைவர் மு.பி. பாலசுப்பிரமணியன்

ஜூன் 27 (2020)